www.Padasalai.Net www.CBSEtips.in

V11Acc

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்
அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2022

வகுப்பு 11

நேரம்: 3.00 மணி

கணக்குப்பதிவியல்

மொத்த மதிப்பெண்கள்: 90

பகுதி - அ

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும்: 20×1=20

1) ஒரு வணிகத்தின் நிதிநிலையை அறிந்து கொள்ள அடிப்படையானது
அ) குறிப்பேடு ஆ) இருப்பாய்வு இ) இருப்புநிலைக்குறிப்பு ஈ) பேரேடு

2) வணிகம் நீண்ட காலம் தொடர்ச்சியாக நடைபெறும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது
அ) வணிக தனித்தன்மை கருத்து ஆ) நிறுவன தொடர்ச்சி கருத்து
இ) கணக்கியல் கால கருத்து ஈ) முன்னெச்சரிக்கை கொள்கை

3) வங்கியிலிருந்து பணம் எடுக்கும் போது வங்கியானது
அ) வாடிக்கையாளர் கணக்கில் வரவு செய்யும் ஆ) வாடிக்கையாளர் கணக்கில் பற்று செய்யும்
இ) வாடிக்கையாளர் கணக்கில் பற்று மற்றும் வரவு செய்யும் ஈ) மேற்கண்ட ஏதுமில்லை

4) இருப்பாய்வு கீழ்க்கண்ட எந்தக் கணக்குகளை உள்ளடக்கி இருக்கும்?
அ) ஆள்சார் கணக்குகள் மட்டும் ஆ) சொத்துக் கணக்குகள் மட்டும்
இ) பெயரளவு கணக்குகள் மட்டும் ஈ) அனைத்துக் கணக்குகளும்

5) முன்கூட்டிச் செலுத்திய வாடகை ஒரு
அ) பெயரளவு கணக்கு ஆ) ஆள்சார் கணக்கு
இ) சொத்துக் கணக்கு ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

6) விற்பனை ஏட்டின் மொத்தம் ஒரு குறிப்பிட்ட காலஅளவில் வரவு வைக்கப்படுவது
அ) விற்பனை கணக்கு ஆ) ரொக்க கணக்கு இ) கொள்முதல் கணக்கு ஈ) உரிய குறிப்பேடு

7) இந்திய கூட்டுப் பங்கு நிறுமச் சட்டம் 2013 பிரிவு 128(1)ன் படி நிறுமங்கள் அனைத்தும் ...... அடிப்படையில் கணக்கேடுகளில் நடவடிக்கைகளை பதிவு செய்வது அவசியமாகிறது.
அ) ரொக்க அடிப்படை ஆ) வணிக / நிகழ்வு அடிப்படை
இ) கலப்பின அடிப்படை ஈ) மேற்கண்ட ஏதுமில்லை

8) ஒரு பேரேட்டுக் கணக்கின் பற்று பத்தியின் மொத்தத்திலிருந்தும் மற்றும் வரவு பத்தியின் மொத்தத்திலிருந்தும் நிகர இருப்பினை கண்டறியும் வழிமுறையை இவ்வாறு அழைக்கலாம்.
அ) கூட்டுதல் ஆ) எடுத்தெழுதுதல் இ) குறிப்பேட்டில் பதிதல் ஈ) இருப்புக்கட்டுதல்

9) பேரேட்டுக் கணக்குகள் தயாரிப்பதன் முக்கிய நோக்கம்
அ) நிதிநிலைமையை அறிய ஆ) இலாபம் அல்லது நட்டத்தை அறிய
இ) நிதிநிலைமையை மற்றும் இலாபம் அல்லது நட்டத்தை அறிய
ஈ) ஒவ்வொரு பேரேட்டுக் கணக்கின் இருப்பை அறிய

10) தமது வாடிக்கையாளரால் திருப்பி அனுப்பப்படும் சரக்கு குறித்து விற்பனையாளரால் தயாரிக்கப்படும் அறிக்கை
அ) வரவுக் குறிப்பு ஆ) பற்றுக் குறிப்பு இ) இடாப்பு ஈ) ரொக்க ரசீது

11) திருத்தியமைக்கப்பட்ட மென்பொருள் ..............க்கு ஏற்றவை.
அ) பெரிய, நடுத்தர வணிகம் ஆ) பெரிய, தனித்தன்மையான வணிகம்
இ) சிறிய, பாரம்பரிய வணிகம் ஈ) மேலே கூறிய எதுவும் இல்லை

12) சொத்தின் இறுதி மதிப்பு என்பது, பயனளிப்பு காலத்தின் .............. அச்சொத்திலிருந்து கிடைக்கும் தொகையாகும்.
அ) ஆரம்பத்தில் ஆ) இறுதியில் இ) மத்தியில் ஈ) இவைகளில் எதுவுமில்லை

13) கொள்முதல் ஏட்டின் மொத்தத் தொகை அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது. கீழ்க்கண்டவற்றில் எந்தக் கணக்கைப் பற்று வைக்க வேண்டும்?
அ) கொள்முதல் கணக்கு ஆ) அனாமத்துக் கணக்கு
இ) கடனீந்தோர் கணக்கு ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

14) திரையரங்கத்தின் இருக்கை வசதிகளை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள்
அ) முதலினச் செலவு ஆ) வருவாயினச் செலவு
இ) நீள்பயன் வருவாயினச் செலவு ஈ) மேற்கூறியவற்றில் ஏதுமில்லை

15) GAAP என்பது
அ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள்
ஆ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் வழிமுறைகள்
இ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகள்
ஈ) இவற்றில் ஏதுமில்லை

16) இயந்திரம் நிறுவுவதற்கு செலுத்தப்பட்ட கூலியை கூலிக் கணக்கில் பற்று வைப்பது
அ) முழு விடுபிழை ஆ) பகுதி விடுபிழை இ) இருமுறை பதிந்த பிழை ஈ) விதிப்பிழை

17) கீழ்க்கண்ட எந்தக் கணக்கின் இருப்பு இருப்பாய்வில் பற்றுப் பத்தியில் தோன்றும்?
அ) எடுப்புகள் கணக்கு ஆ) பற்பல கடனீந்தோர் கணக்கு
இ) முதல் கணக்கு ஈ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு

18) ஒரு நடவடிக்கையின் பற்று மற்றும் வரவுத் தன்மைகளை ரொக்க ஏட்டில் பதிந்தால், அது
அ) கூட்டுப்பதிவு ஆ) ஒற்றைப்பதிவு இ) எதிர்ப்பதிவு ஈ) சாதாரணப் பதிவு

19) இருப்பாய்வில் காணப்படும் எடுப்புகள்
அ) கொள்முதலோடு கூட்டப்படும் ஆ) கொள்முதலிலிருந்து கழிக்கப்படும்
இ) முதலோடு கூட்டப்படும் ஈ) முதலிலிருந்து கழிக்கப்படும்

20) முதலீடுகள் மீது கூடியுள்ள வட்டி தோன்றுவது
அ) இலாபநட்டக் கணக்கின் வரவு பக்கம் ஆ) இருப்புநிலைக்குறிப்பின் சொத்துகள் பக்கம்
இ) மேற்கண்ட இரண்டிலும் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

## பகுதி - ஆ

**ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. கேள்வி எண் 30க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** **7×2=14**

21) கணக்கியல் வரைவிலக்கணம் தருக.

22) கணக்கியல் கருத்துகள் என்றால் என்ன?

23) ஏதேனும் இரண்டு கணக்கியல் தொகுப்பின் பெயர்களைக் குறிப்பிடுக.

24) பற்று இருப்பு என்றால் என்ன?

25) கீழ்க்கண்ட வாக்கியங்களுக்கு ஒரு வார்த்தையில் விடையளி.
அ) வங்கியில் அளிக்கப்படும் வாடிக்கையாளர் கணக்கின் நகல்.
ஆ) வங்கி அறிக்கையின்படி பற்றிருப்பு

26) பின்வருவனவற்றை ஆள்சார், சொத்து, பெயரளவு கணக்கு என வகைப்படுத்துக.
(அ) முதல் (ஆ) கொள்முதல் (இ) ராஜேஷ் (ஈ) அறைகலன்

27) பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகளுக்கான விளக்கக்குறிப்பு தருக.

| நாள் | விவரம் | | பே.ப.எ | பற்று (₹) | வரவு (₹) |
|---|---|---|---|---|---|
| 2018 ஏப்ரல் 1 | ரொக்க க/கு | ப | | 3,00,000 | |
| | ஷியாம் முதல் க/கு | | | | 3,00,000 |
| | (.............................................) | | | | |
| 2 | ரொக்க க/கு | ப | | 50,000 | |
| | வங்கி க/கு | | | | 50,000 |
| | (.............................................) | | | | |

28) ஒரு நிறுவனம் ₹ 50,000 மதிப்புள்ள இயந்திரத்தை வாங்கியது. நிறுவுதல் செலவாக ₹ 5,000 மேற்கொண்டது. இயந்திரத்தின் எதிர்நோக்கும் பயனளிப்புக் காலம் 5 ஆண்டுகள் நேர்கோட்டு முறையில் ஆண்டுத் தேய்மானத் தொகையை கணக்கிடுக.

29) இறுதி சரக்கிருப்பு ₹ 1,00,000 சரிக்கட்டுப்பதிவு தருக.

30) கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து சரக்கு விற்பனைக்கான அடக்கத்தினைக் கணக்கிடவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 10,000 | மறைமுகச் செலவுகள் | 5,000 |
| கொள்முதல் | 80,000 | இறுதிச் சரக்கிருப்பு | 15,000 |
| நேரடிச் செலவுகள் | 7,000 | | |

## பகுதி - இ

**ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. கேள்வி எண் 40க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** **7×3=21**

31) கணினி அமைப்பின் உள்ளீட்டு மற்றும் வெளியீட்டு சாதனங்களைக் குறிப்பிடுக.

32) முதலின வரவு மற்றும் வருவாயின வரவு - வேறுபடுத்தவும்.

33) 2018, ஜனவரி 1 அன்று வினோத் என்பவரின் ஏடுகளில் கீழ்க்கண்ட இருப்புகள் காணப்பட்டன. **சொத்துகள்:** ரொக்கம் ₹ 40,000; சரக்கிருப்பு ₹ 50,000; ராம் என்பவரிடமிருந்து பெற வேண்டியது ₹ 20,000; இயந்திரம் ₹ 40,000. **பொறுப்புகள்:** விஜய் என்பவருக்கு செலுத்த வேண்டியது ₹ 10,000. தொடக்கப்பதிவினைத் தந்து வினோத்தின் முதல் கணக்கில் எடுத்து எழுதவும்.

34) இருப்பாய்வு தயாரிக்கப்பட்ட பின் கண்டறியப்பட்ட பின்வரும் பிழைகளை திருத்துவதற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.
அ) கொள்முதல் ஏட்டில் ₹ 10,000 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.
ஆ) அறைகலன் பழுதுபார்ப்புச் செலவு ₹ 500 அறைகலன் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது.
இ) அகிலுக்கு கடனுக்கு ₹ 456க்கு விற்றது. அவர் கணக்கில் ₹ 654 என வரவு வைக்கப்பட்டுள்ளது.

35) கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக:

| | சொத்துகள் (₹) | = | முதல் (₹) | + | பொறுப்புகள் (₹) |
|---|---|---|---|---|---|
| அ) | 45,000 | = | 25,000 | + | ? |
| ஆ) | 1,00,000 | = | ? | + | 60,000 |
| இ) | ? | = | 1,25,000 | + | 75,000 |
| ஈ) | ? | = | 80,000 | + | 10,000 |
| உ) | 60,000 | = | 25,000 | + | ? |
| ஊ) | 25,000 | = | ? | + | 15,000 |

36) பின்வரும் நடவடிக்கைகளை எழுதுபொருள் வியாபாரம் செய்யும் இராம் நிறுவனத்தின் விற்பனை ஏட்டில் பதிவு செய்க.

| | | | ₹ |
|---|---|---|---|
| 2017 ஜனவரி | 1 | அன்புவிற்கு இடாப்பு எண் 75ன் படி கடனுக்கு விற்றது | 30,000 |
| | 2 | ஜெகதீஷ் நிறுவனத்திற்கு இடாப்பு எண் 84ன் படி விற்றது | 20,500 |
| | 10 | பழைய செய்தித்தாளை விற்றது | 1,000 |
| | 15 | இளங்கோவன் என்பவருக்கு ரொக்கத்திற்கு விற்றது | 3,000 |
| | 20 | கனி விற்பனையகத்திற்கு கடனுக்கு விற்றது | 6,840 |

37) கீழ்க்காணும் விவரங்களிலிருந்து இலாபநட்டக் கணக்கினை தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| மொத்த இலாபம் | 50,000 | வட்டி பெற்றது | 2,000 |
| அலுவலக வாடகை | 10,000 | வெளிதூக்கு கூலி | 2,500 |
| தள்ளுபடி கொடுத்தது | 12,000 | பொதுச்செலவுகள் | 3,000 |
| விளம்பரம் | 4,000 | உள்தூக்கு கூலி | 7,000 |
| தணிக்கைக் கட்டணம் | 1,000 | | |

38) நிலைச்சொத்து ₹ 50,000க்கு வாங்கப்பட்டது. தேய்மான விகிதம் ஆண்டுக்கு 15% குறைந்து செல் இருப்பு முறையில் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு தேய்மானத் தொகையை கணக்கிடவும்.

39) கீழ்க்கண்ட கணக்குகளின் இருப்புகள் இருப்பாய்வில் பற்றுப் பத்தியில் இடம் பெறுமா அல்லது வரவுப் பத்தியில் இடம் பெறுமா எனக் குறிப்பிடவும்.
(i) வெளித்தூக்குக் கூலி (ii) கூலி (iii) வாடகை பெற்றது
(iv) முதல் (v) விற்பனை (vi) கொள்முதல் திருப்பம்

40) இரட்டைப்பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

பகுதி - ஈ

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: 7×5=35

41) பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு நிரஞ்சன் அவர்களின் 2017 பிப்ரவரி மாதத்திற்கு துணை ஏடுகளை தயார் செய்க.

2017 பிப்ரவரி 1 முகில் நிறுவனத்திடம் கடனுக்கு சரக்கு வாங்கியது ₹ 12,480
4 சச்சின் நிறுவனத்திடம் கடனுக்கு சரக்கு விற்றது ₹ 15,000
6 மனிஷ் நிறுவனத்திற்கு சரக்கு விற்றது ₹ 12,100
7 சச்சின் நிறுவனம் திருப்பிய சரக்கு அதற்கு பணம் செலுத்தப்படவில்லை ₹ 1,200
9 முகில் நிறுவனத்திற்கு சரக்கு திருப்பியது பணம் பெறப்படவில்லை ₹ 1,500
10 மனிஷ் நிறுவனத்திற்கு சரக்கு விற்றது ₹ 13,300
14 முகில் நிறுவனத்திடம் கடனுக்கு சரக்கு வாங்கியது ₹ 15,200

(அல்லது)

பின்வரும் நடவடிக்கைகளுக்குக் குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

2019 மார்ச் 1 ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ₹ 60,000
5 ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹ 20,000
9 ராஜாவிடம் கடனுக்கு சரக்கு வாங்கியது ₹ 25,000
15 சரக்கினை விற்றது ₹ 15,000
31 வாடகை செலுத்தியது ₹ 1,000

42) பின்வரும் தொடக்கப்பதிவினைக் கொண்டு ஜாய் என்பவரின் ஏடுகளில் பேரேட்டுக் கணக்குகளை தயாரிக்கவும்.

| நாள் | விவரம் | | பே.ப.எ | பற்று (₹) | வரவு (₹) |
|---|---|---|---|---|---|
| 2017 ஏப்ரல் 1 | ரொக்க க/கு | ப | | 30,000 | |
| | சரக்கிருப்பு க/கு | ப | | 50,000 | |
| | சோகன் க/கு | ப | | 35,000 | |
| | ராம் க/கு | | | | 15,000 |
| | ஜாய்முதல் க/கு | | | | 1,00,000 |
| | (சென்ற ஆண்டின் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் கணக்கில் கொண்டு வரப்பட்டது) | | | | |

(அல்லது)

பாபு என்பவரது ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்க்காணும் இருப்புகளைக் கொண்டு 31.03.2020 ஆம் ஆண்டிற்குரிய இருப்புகளைத் தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| கைரொக்கம் | 7,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 7,000 |
| பற்பல கடனாளிகள் | 5,400 | பற்பல கடனீந்தோர் | 11,800 |
| சம்பளம் | 6,800 | முதல் | 25,000 |
| வாராக்கடன் | 200 | கொள்முதல் | 45,000 |
| தொடக்கச் சரக்கிருப்பு | 15,400 | விற்பனை | 50,000 |

43) 2017 மே மாதத்திற்கான ரமணி என்பவரின் ரொக்கம், வங்கி மற்றும் தள்ளுபடி பத்திகளுடைய ரொக்க ஏட்டில் கீழ்க்கண்ட நடவடிக்கைகளைப் பதிவு செய்க.

2017 மே 1 ரொக்க இருப்பு ₹ 17,200
வங்கியிருப்பு ₹ 50,000
4 ரமேஷிடமிருந்து பெற்ற காசோலை ₹ 6,500 தீர்த்துக் கொண்ட கணக்கு ₹ 7,000.
15 மடிக்கணினி, அலுவலகப் பயன்பாட்டிற்காக வாங்கப்பட்டு அதற்குரிய தொகையை தேசிய மின்னணு நிதிபரிமாற்றம் மூலம் செலுத்தியது ₹ 21,000
17 வங்கியிலிருந்து பணம் எடுத்தது ₹ 9,600
24 சரக்கு ரொக்கத்திற்கு வாங்கியது ₹ 12,400
சரக்கு காசோலை மூலம் வாங்கியது ₹ 18,200

(அல்லது)

பின்வரும் நடவடிக்கைகளை (வரவுகள் மற்றும் செலவுகள்) முதலினம் மற்றும் வருவாயினங்களாக வகைப்படுத்துக.

அ) சரக்கு விற்பனை வாயிலாகப் பெற்றது ₹ 75,000.
ஆ) வங்கியிடமிருந்து பெற்ற கடன் ₹ 2,50,000.
இ) முதலீடு விற்பனை செய்தது ₹ 1,20,000.
ஈ) கழிவு பெற்றது ₹ 30,000.
உ) புதிய இயந்திரம் நிறுவுவதற்காக கூலி செலுத்தியது ₹ 1,400.

44) ஒரு நிறுவனத்தின் கணக்காளர் இருப்பாய்வு சமன்படாதல் ₹ 922 வித்தியாசம் (கூடுதல் வரவு) இருப்பதை அறிந்தார். அவர் அந்தத் தொகையை அனாமத்துக் கணக்கில் பதிந்துவிட்டு, அதைத் தொடர்ந்து பின்வரும் பிழைகளைக் கண்டறிந்தார்.

i) ரொக்க ஏட்டின் வரவுப்பக்கம் உள்ள தள்ளுபடிப் பத்தியின் கூட்டுத்தொகை ₹ 78 பேரேட்டில் எடுத்து எழுதப்படவில்லை.
ii) கொள்முதல் ஏட்டின் கூட்டுத்தொகையில் ₹ 1,000 குறைவாக உள்ளது.
iii) நடராஜனுக்கு கடனுக்கு ₹ 375க்கு விற்றது விற்பனை ஏட்டில் 735 என பதிவு செய்யப்பட்டுள்ளது.
iv) மேகலாவுக்கு கடனுக்கு ₹ 700க்கு விற்றது கொள்முதல் ஏட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிழைத்திருத்தப் பதிவுகளைத் தந்து அனாமத்துக் கணக்கைத் தயாரிக்கவும்.

(அல்லது)

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



பின்வரும் நடவடிக்கைகளை பாகுபடுத்தப்பட்ட சில்லறை ரொக்க ஏட்டில் எழுதி இருப்புக்கட்டுக.

2020 டிசம்பர் 1 ஆம் நாள் சில்லறைக் காசாளர் ₹ 2,000 முன்பணத்துடன் தொடங்கினார்.

| | | ₹ |
|---|---|---|
| 1 | அஞ்சல் தலைகள் வாங்கியது | 155 |
| 2 | சுத்தம் செய்பவருக்கு கொடுத்தது | 175 |
| 3 | மேலாளருக்கு பயணக்கட்டணம் செலுத்தியது | 125 |
| 5 | ஏற்றுக்கூலி கொடுத்தது | 70 |
| 9 | அறைகலன் பழுதுபார்த்தது | 100 |
| 11 | அலுவலகப் பயன்பாட்டிற்கு பசை வாங்கியது | 50 |
| 15 | கணிப்பொறி பழுதுபார்த்தது | 300 |

45) பின்வரும் தகவல்களிலிருந்து 2017 டிசம்பர் 31ம் நாளுக்குரிய வங்கிச்சரிக்கட்டும் பட்டியலை தயாரித்து வங்கி அறிக்கையின் படியான இருப்பினைக் கணக்கிடவும்.

| வ.எண் | விவரம் | ₹ |
|---|---|---|
| அ) | ரொக்க ஏட்டின்படி இருப்பு | 15,000 |
| ஆ) | செலுத்திய காசோலை இன்னும் வரவு வைக்கப்படாதது | 1,000 |
| இ) | 2017 டிசம்பர் 31க்கு முன்னர் விடுத்த காசோலை ரொக்க ஏட்டில் பதியப்பெற்று அந்நாள் வரை செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படவில்லை | 1,500 |
| ஈ) | வங்கியால் நேரடியாகப் பெற்ற பங்காதாயம் | 1,000 |
| உ) | வங்கியால் நேரடியாகச் செலுத்திப்பெற்ற வாடகை | 1,200 |

**(அல்லது)**

கீழ்க்கண்ட விவரங்கள் இருப்பாய்விலிருந்து பெறப்பட்டன.

கடனாளிகள் ₹ 30,000; வாராக்கடன் ₹ 5,000

**சரிக்கட்டுதல்கள்:**

அ) கூடுதல் வாராக்கடன் ₹ 3,000 போக்கெழுதவும்.

ஆ) 10% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்கவும்.

தேவையான சரிக்கட்டுப்பதிவுகள் தந்து இவ்விவரம் இலாபநட்டக்கணக்கு மற்றும் இருப்புநிலைக்குறிப்பில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டிடுக.

46) பின்வரும் நடவடிக்கைகளின் கணக்கியல் சமன்பாட்டினை தயார் செய்க.

அ) முருகன் ₹ 80,000 ரொக்கத்துடன் தொழிலைத் தொடங்கினார்.

ஆ) ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹ 30,000.

இ) ரொக்கமாக வழங்கிய சம்பளம் ₹ 5,000.

ஈ) குமாரிடமிருந்து சரக்கு வாங்கியதற்கு பணம் வைப்பு இயந்திரம் மூலம் செலுத்தியது ₹ 5,000.

உ) கூடுதல் முதல் இட்டது ₹ 10,000.

**(அல்லது)**

கணேஷ் என்பவரின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் இருப்புகளிலிருந்து வியாபார, இலாபநட்டக்கணக்கு தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு (01.01.2021) | 8,000 | வாராக்கடன் | 1,200 |
| கொள்முதல் | 22,000 | வியாபாரச் செலவுகள் | 1,200 |
| விற்பனை | 42,000 | அளித்த தள்ளுபடி | 600 |
| கொள்முதல் மீதான செலவுகள் | 2,500 | கழிவு கொடுத்தது | 1,700 |
| நிதிசார் செலவுகள் | 3,500 | விற்பனைச் செலவுகள் | 1,600 |

31.12.2021 அன்றைய இறுதிச் சரக்கிருப்பின் மதிப்பு ₹ 4,500.

47) பின்வரும் விவரங்களைக் கொண்டு தேய்மானத் தொகை கணக்கிட்டு முதல் இரண்டு ஆண்டுகளுக்கு குறிப்பேட்டுப் பதிவுகள் தருக. ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 31ல் கணக்குகள் முடிக்கப்படுகின்றன.

| | | ₹ |
|---|---|---|
| ஜனவரி 1, 2016 | இயந்திரம் வாங்கியதற்கு செலுத்தியது | 1,40,000 |
| ஜனவரி 1, 2016 | இயந்திரம் கொண்டு வருவதற்கு போக்குவரத்து செலவுகள் | 1,000 |
| ஜனவரி 1, 2016 | நிறுவகைச் செலவுகள் | 9,000 |

சொத்தின் பயனளிப்பு காலம் 7 ஆண்டுகள்; இறுதி மதிப்பு ₹ 45,000.

**(அல்லது)**

நிரூபனின் பின்வரும் இருப்புகளிலிருந்து 2021 மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக்குறிப்பு தயாரிக்கவும்.

| விவரம் | பற்று (₹) | வரவு (₹) |
|---|---|---|
| பொறி மற்றும் இயந்திரம் | 8,00,000 | |
| நிலம் மற்றும் கட்டடம் | 6,00,000 | |
| அறைகலன் | 1,50,000 | |
| கைரொக்கம் | 20,000 | |
| வங்கி மேல்வரைப்பற்று | | 1,80,000 |
| கடனாளிகள் மற்றும் கடனீந்தோர் | 3,20,000 | 2,40,000 |
| பெறுதற்குரிய மற்றும் செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 1,00,000 | 60,000 |
| இறுதி சரக்கிருப்பு | 4,00,000 | |
| குறுகிய கால முதலீடுகள் | 80,000 | |
| முதல் | | 15,00,000 |
| எடுப்புகள் | 1,30,000 | |
| நிகர இலாபம் | | 6,20,000 |
| | 26,00,000 | 26,00,000 |

-----------

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com